Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC. No.7 /2023

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –11

| | | | |
|---|---|---|---|
| Name: | தங்கராஜன் | Calling: | உதவி ஆய்வாளர் ஓய்வு |
| Father's Name: | தாதகுட்டி | Religion: | |
| Village: | தெக்குப்பட்டு | Age: | 62 |
| Taluk: | நாட்றம்பள்ளி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 23.02.2026 நேரம் : 11.45 AM

( எதிரிகள் ஆஜர் .)

அ.சா.11 முதன்மை விசாரணை

(ஏற்கனவே திரு. மகாலிங்கம் உதவி ஆய்வாளர் உதவி ஆய்வாளர் திரு. தங்கராஜன் என்பவருக்கு சேர்த்து சாட்சியம் அளித்துள்ள நிலையில் வழக்கின் நன்மை கருதி நீதிமன்றத்தால் அழைத்து மீண்டும் விசாரணை செய்யப்படுகிறது.)

நான் திருப்பத்தூர் மாவட்ட சாலை போக்குவரத்து பிரிவு 3 ல் உதவி ஆய்வாளராக பணியாற்றி கடந்த 30.06.2024 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 2021 ம் வருடத்தில் வாணியம்பாடி கிராமிய காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது குற்ற எண். 382/2021 இதச சட்டப்பிரிவுகள் 147,148,294(b), 323,324,506(ii) என்ற வழக்கில் அப்போதைய நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு. ஈஸ்வரன் அவர்கள் கடந்த 11.07.2021 ம் தேதி 18.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொண்டு 12.07.2021 ம் தேதி காலை

10.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகள் திரு. பிந்து, அருள் ஆகியோர்கள் முன்னிலையில் ஒரு மாதிரி வரைப்படம் வரைந்தோம், பார்வை மகசர் தயார் செய்தோம். சாட்சிகள் ஆனந்தன், மோனிஷ், அரவிந்த், மீனா, ராணி, பிந்து, அருள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 1 ம் எதிரி தேவராஜ், 2 ம் எதிரி சிவலிங்கம், 3 ம் எதிரி வேல்முருகன், 4 ம் எதிரி மணி, 5 ம் எதிரி கோகிலா ஆகியோர்கள் தலைமறைவாக இருந்துள்ளதால் அவர்களை தக்கபுலன் வைத்து தேடிவந்த நிலையில் காவலூர் காவல் நிலையத்திற்கு பணி மாறுதலில் சென்றுவிட்டார். மேற்படி வழக்கை உதவி ஆய்வாளராகிய நான் கடந்த 05.08.2021 ம் தேதி வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று பார்வையிட்டேன். சம்பவயிடமானது உதவி ஆய்வாளர் திரு. ஈஸ்வரன் அவர்கள் பார்வையிட்டது போலவே இருந்ததால் நான் தனியாக மாதிரி வரைப்படம் , பார்வைமகசர் தயார் செய்யவில்லை. மேற்படி உதவி ஆய்வாளர் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்கள் விசாரணை செய்ததை நான் மறுவிசாரணை செய்தேன். சாட்சிகள் அனைவரும் உதவி ஆய்வாளரிடம் சொன்னது போலவே என்னிடம் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேற்படி வழக்கில் சம்மந்தப்பட்ட 1 முதல் 5 வரையிலான எதிரிகள் தலைமறைவாக இருந்தவர்களை நான் தேடிவந்த நிலையில் கடந்த 05.08.2021 ம் தேதி வாணியம்பாடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CMP No. 2913/2021 ன் படி மேற்படி நீதிமன்றத்தில் சரண் அடைந்து நீதிமன்ற பிணையில் சென்றுவிட்டதாக நீதிமன்ற காவலர் மூலம் அறிந்துக்கொண்டேன். பின்பு இவ்வழக்கில் காயமடைந்த சாட்சி 1 ஆனந்தன், சாட்சி 2 மோனிஷ், சாட்சி 3 அரவிந்த், சாட்சி 4 மீனா ஆகியோர்களின் காயத்தின் தன்மை அறியும் பொருட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை அளித்த மருத்துவர். திரு.பிரவீன்குமார் அவர்களை சந்தித்து தனித்தனியாக காயச்சான்றுகள் பெற்றேன். மேற்படி மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததில் சாட்சிகள் நால்வருக்கும் ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று தனித்தனியாக காயச்சான்றிதழ் வழங்கினார். இவ்வழக்கை பொறுத்தமட்டில் உதவி ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் விசாரணையிலும், என்னுடைய புலன் விசாரணையிலும் சம்பவயிடத்தை பார்வையிட்டதிலும் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும் மேற்படி 1 முதல் 5 வரையிலான எதிரிகள் குற்றவாளிகள் என தெரியவந்ததால் 1ம் எதிரி தேவராஜ் என்பவர் மீது பிரிவு 147,148,294(b),324(2 counts),506(ii) IPC படியும் 2 ம் எதிரி சிவலிங்கம்

என்பவரின் மீது 147,148,324(2 counts),506(ii) IPC படியும் 3 ம் எதிரி வேல்முருகன் மீது 147,148,323 IPC படியும், 4 ம் எதிரி மணி என்பவரின் மீது 147,148,324, 506(ii) IPC படியும், 5ம் எதிரி கோகிலா மீது 147,148 ,323 IPC படியும் மேற்படி எதிரிகள் மீது 147,148,294(b),323,324,506(ii) IPC படிக்கு குற்ற அறிக்கை தயார் செய்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் , வாணியம்பாடி அவர்களுக்கு பணிந்து சமர்பித்துக்கொண்டேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் ஆஜர் எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் நிலம் சம்மந்தமாக அடிக்கடி பிரச்சனை வரும் முன்விரோதம் உள்ளது என்பதை குறித்து விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் வாக்குமூலத்தில் அவர் சொல்லவில்லை, ஆனால் எனக்கு தெரியும். நான் சம்பவயிடத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். நான் சம்பவயிடத்திற்கு சென்று தனியாக பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் தயார் செய்திருந்தது சரியாக இருந்ததால் நான் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். அவர் தயார் செய்த மாதிரி வரைப்படத்தில் சம்பவயிடத்தை குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் இல்லை. இந்த வழக்கு எந்த காரணத்தினால் ஏற்பட்டது என்றால் இரண்டு மரங்களை வெட்டியதால் பிரச்சனை ஏற்பட்டது. இந்த வழக்கில் வெட்டப்பட்டதாக சொல்லும் புங்கமரம் மற்றும் முருங்கை மரத்தை கைப்பற்றியுள்ளேனா என்றால் இல்லை. மரம் வெட்ட பயன்படுத்திய கத்தியை கைப்பற்றியுள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற வழக்கு கோப்பில் உள்ள பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் உள்ளது என்றாலும் தற்போது என்னிடம் உள்ள கோப்பில் உள்ள பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் இல்லை என்றாலும் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரிகளுக்கு கொடுத்த பார்வை மகசர் ஆவணத்தில் யார் அதை தாயரித்ததாக உள்ளது என்றால் என்னுடைய கையொப்பம் தான் உள்ளது. இவ்வழக்கில் எதிரிகள் பயன்படுத்தி பொருட்கள் ஏதேனும் கைப்பற்றி வழக்கு சொத்தாக சேர்த்துள்ளேனா என்றால் எதிரிகள் தலைமறைவானதால் வழக்கு சொத்தை கைப்பற்ற இயலவில்லை. எதிரிகள் 05.08.2021 ம் தேதியே நீதிமன்ற பிணையில் வெளியில் வந்துவிட்டார்கள் என்றாலும் அதன்பின்பு எதிரிகளை விசாரிக்கவேண்டும் என்று குவிமுச 41 ன் கீழ் அறிவிப்பு ஏதேனும் வழங்கினேனா என்றால் இல்லை. எதிரிகள் பிணையில் வந்த உடன் அவர்களிடம் இருந்து வழக்கு சொத்தை கைப்பற்ற நான் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. புகார்தாரும்

எதிரிகளை தாக்கியதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து ஒரு வழக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு முதல் தகவல் அறிக்கை யார் பதிவு செய்தது என்றால் திரு. ஈஸ்வரன் உதவி ஆய்வாளர் தயாரித்தார். அந்த வழக்கிற்கும் நான் தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். மருத்துவரை விசாரித்து இந்த வழக்கில் நான் தான் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகள் எந்த சம்பவ இடத்தில் தன்னை தாக்கியதாக புகார் தாரர் மருத்துவரிடம் கூறியுள்ளார் என்றால் கொத்த கோட்டை என்று தான் குறிப்பிட்டுள்ளார்கள். வாதிகள் நிலத்தில் நடைபெறவில்லை என்று குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். ஆனந்தன் என்பவர் மருத்துவரிடம் கொத்தகோட்டையிலோ, அவரது நிலத்திலோ சம்பவம் நடைப்பெற்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மீனா என்பவர் மருத்துவரிடம் கொத்தகோட்டையிலோ, அவரது நிலத்திலோ சம்பவம் நடைப்பெற்றதாக குறிப்பிடவில்லை என்றால் கொத்தகோட்டை என்று தான் குறிப்பிட்டுள்ளார். மோனிஷ் என்பவர் எதிரிகள் தங்களை எந்த இடத்தில் தாக்கியதாக மருத்துவரிடம் கூறியுள்ளார் என்றால் குறிப்பிடவில்லை. அரவிந்த் என்பவர் எதிரிகள் தங்களை எந்த சம்பவயிடத்தில் தாக்கியதாக மருத்துவரிடம் கூறியுள்ளார் என்றால் சம்பவயிடம் பற்றி குறிப்பிடவில்லை. முதல் கட்ட விசாரணை செய்த உதவி ஆய்வாளர் திரு. ஈஸ்வரன் என்பவர் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சம்பவயிடத்திற்கு சென்றிருந்தால் சம்பவம் நடந்த இடத்தை மாதிரி வரைப்படத்தில் குறிப்பட்டு இருப்பார் என்றால் சரியல்ல. புகார் தாரர் மற்றும் சாட்சிகள் தாக்கி எதிரிகள் மருத்துவமனையில் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் சென்று இருந்தால் வெட்டப்பட்டதாக சொல்லும் மரங்களை வழக்கு சொத்தாக சேர்த்திருப்பேன் என்றால் நான் சம்பவயிடம் செல்லும் போது வெட்டப்பட்ட மரங்கள் இல்லை. மரம் வெட்டியிருந்தால் அந்த புகைப்படத்தையாவது இந்த வழக்கில் சான்று பொருளாக சேர்த்திருப்பேன் என்றால் புகைப்படம் எடுக்கவில்லை. இந்த வழக்கின் எதிரிகள் விவசாய கூலிகள் என்றால் சரியாக நினைவில்லை. இந்த வழக்கின் புகார் தாரர் மற்றும் சாட்சிகள் அரசு வேலையில் உள்ளவர்கள் என்றால் அரசு வேலையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள். சாட்சிகள் எதிரிகளை தாக்கிவிட்டு ஓடும் போது அவர்களாகவே கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து தங்களை தற்காத்து கொள்ள கொடுத்த பொய் புகாரினை சரிவர

விசாரிக்காமல் எதிரிகள் மீது ஒரு தவறான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு சம்பவத்தை குறித்து ஒரே புலன் விசாரணை அதிகாரி ஒரே நேரத்தில் புலன்விசாரணை மேற்கொள்ள கூடாது என்பது காவலர் நிலைய ஆணை சட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். காவலர் நிலைய ஆணை சட்டத்தை மீறி நாங்கள் இருவரும் இந்த வழக்கை விசாரித்துள்ளோம் என்றால் அப்போது அதிகாரிகள் இல்லாததால் புலன் விசாரணைக்கு நாங்களே எடுத்துக்கொண்டோம். உண்மையில் பாதிக்கப்பட்ட எதிரிகளுக்கு சாதகமாக புகார்தாரர் மீது தான் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) தங்கராஜன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.24 14:40:36 +0530